

# ஜீலை 25

# புனித யாகப்பர்

இவர் செபதேயு, சலோமே இவர்களின் மகன். கலிலேயாவிலுள்ள பெத்சாயிதா ஊரில் பிறந்தார். இவரும் இவருடைய தம்பி அருளப்பரும் தங்கள் தந்தையுடன் மீன் பிடித்தபின் வலைகளைப் பழுது பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது இயேசு இரு சகோதரர்களையும் அழைத்தார். வலைகளையும் தந்தையையும் விட்டுவிட்டு அவர்கள் இயேசுவைப் பின் சென்றார்கள். ஒருமுறை இராயப்பருக்குப் புதுமையாக ஏராளமான மீன்கள் அகப்பட்டபோது யாகப்பரும் அவருடன் இருந்தார். தொடக்கத்தில் இவர் ஸ்நாபக அருளப்பருடைய சீடராயிந்தார். இராயப்பருடைய மாமியாரை இயேசு குணப்படுத்திய போதும், ஜாயிர் என்பவருடைய மகளுக்கு இயேசு உயிரளித்த போதும், தபோர் மலையின் இயேசு மறு ரூபமான போதும் பூங்காவனத்தில் அவர் மரண அவஸ்தைப்பட்ட போதும் யாகப்பர் அருகிலிருந்தார். இவருக்கும் இவர் தம்பி அருளப்பருக்கும் “இடியின் மக்கள்” என ஆண்டவர் பெயரிட்டிருந்தார். சமாரிய மக்கள் இயேசுவை ஒருமுறை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். அந்த மக்களை நெருப்பு வந்து அழிக்க வேண்டும் என யாகப்பரும், அருளப்பரும் விரும்பினர். இயேசுவோ அவர்களைக் கடிந்து கொண்டார். இவர் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டபின் ஸ்பெயின் நாட்டில்வேதம் போதித்தார். பின்னர் யெருசலேமுக்குத் திரும்பினர். வேதசாட்சி முடிபெற்ற முதல் அபோஸ்தலர் இவரே. 44-ஆம் ஆண்டு பாஸ்கா விழாவை ஒட்டி ஏரோது அகிரிப்பா மன்னன் இவரது தலையை வெட்டிக் கொன்றான். இயேசு பருகிற பாத்திரத்திலிருந்து இவரும் கடைசி துளிவரை பருகி மோட்ச முடி பெற்றார்.

**<u>சிந்தனை:</u>**

இயேசுவோடு நாம் மகிமையடைய விரும்பினால் அவர் பருகிய கசப்பான கிண்ணத்திலிருந்து நாமும் பருகக் தயாராயிருக்க வேண்டும்.

## செபம்:

ஆண்டவரே, எங்களுக்கு வரும் சிலுவைகளை உம்மோடு சேர்ந்து சுமக்கும் வரம் தாரும்.